06.04.2026

O.S.No. 78/2023

PW1– வசந்தா – க/பெ. குட்டிச்சாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)

1. எனது சொந்த ஊர் இலஞ்சி. எனது தந்தையின் பெயர் கருப்பையா. எனது தாயாரின் பெயர் கருத்தம்மாள். எனது தாயாருடன் பிறந்தவர்கள் 2 சகோதரர்கள் சுப்பையா மற்றும் பண்டாரம் ஆகியோர்கள்.

2. எனக்கும், சுப்பையாவுக்கும் தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல, நாங்கள் விரும்பினோம், நான் அவர்கள் வீட்டில் தான் வளர்ந்தேன்.

3. சுப்பையாவுக்கு வேறு எந்த திருமணமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். அவரது சகோதரர் பண்டாரத்திற்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான்.

4. மீனா என்ற குழந்தை யாருடையது என்றால் எனது சகோதரியின் மகள், ஆனால் நான் தான் எடுத்து வளர்த்து வந்தேன். நான் மீனாவை தத்து எடுத்தது சம்பந்தமாகவோ, பிறப்பு சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. மீனாவின் பெற்றோர்களின் பெயர் அடையாள ஆவணங்களின்படி எனக்கு தெரியாது. அவர் 8ம் வகுப்பு முதல் கல்லூரி படிப்பு வரை நான் தான் வளர்த்து வந்தேன்.

6. மீனாவின் திருமணப்பத்திரிக்கையில் பெற்றோர்களின் பெயர் என்னவென்று உள்ளது என்றால் லட்சுமி மற்றும் நல்லையா என்று உள்ளது.

7. மீனாவின் பிறப்புசான்றிதழ், படிப்பு சான்றிதழ் மற்றும் திருமணப்பத்திரிக்கை என் வசம் உள்ளதா என்றால் என் வசம் இல்லை, ஆனால் அவர்களை ஆஜர் செய்ய முடியும்.

8. சங்கரன்கோவிலில் தற்போது பெட்ரோல் பங்க் மீனா வைத்துள்ளார் என்றால் சரிதான்.

9. நான் குட்டிச்சாமியை திருமணம் செய்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. எனக்கும், சுப்பையாவுக்கும் திருமணமாகி, திருமணத்தின்மூலம் பிறந்த குழந்தைதான் மீனா என்றால் சரியல்ல. எனக்கும், சுப்பையாவுக்கும் நடந்த திருமணம் நீதிமன்றத்தின் மூலம் ரத்து செய்யவில்லை என்றால் எனக்கும், சுப்பையாவுக்கும் திருமணமே நடைபெறவில்லை.

11. குட்டிச்சாமிக்கு மாரியம்மாள் என்பவருடன் முதலில் திருமணமானது. அவருக்கு எப்போது எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்பது தெரியாது என்றால் சரிதான். நான் எனது பிராதில் குறிப்பிட்டுள்ள நல்லையா குட்டிச்சாமிக்கு என்ன உறவு முறை என்றால் சித்தப்பா முறையவார்.

12. மாரியம்மாளின் அத்தை கணவர் தான் நல்லையா என்றால் சரிதான். தற்போதும் நல்லையா, மாரியம்மாளின் அத்தையான வள்ளியம்மாள் குடும்பத்துடன் செங்கோட்டையில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணத்தின் பலனாக 3 குழந்தைகள் உள்ளனர்.

13. மாரியம்மாளுக்கும், நல்லையாவுக்கும் தொடர்பிருந்தது எனக்கு நேரடியாக தெரியாது. எனது பிராதில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

14. எனக்கும், குட்டிச்சாமிக்கும் தொடர்பு இருந்ததால்தான், மாரியம்மாள் குட்டிச்சாமியை பிரிந்தார் என்றால் சரியல்ல.

15. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 ஆவணத்தில் மாரியம்மாள், குட்டிச்சாமியின் மீதுள்ள தாக்கல் செய்த ஜீவனாம்ச வழக்கு எனக்கும், குட்டிச்சாமிக்கும் தொடர்பு இருந்ததால்தான் அந்த வழக்கு மனுதாரரான மரியம்மாளை குட்டிச்சாமி புறக்கணித்து வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சொல்லியுள்ளது, ஆனால் எனக்கு நேரடியாக தெரியாது.

16. மேற்படி பிரச்சனையால் தான் மாரியம்மாள் தனது பெற்றோர் வசிக்கும் இடமான பாட்டப்பத்துக்கு சென்றார் என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ.6 திருமண ஒப்பந்த ஆவணத்தில் சிறிது காலமாகவே நானும், குட்டிச்சாமியும் காதலித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எந்த காலம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

18. வா.சா.ஆ.6 ஆவணத்தில் திருமணம் செய்ததாக துலங்காது என்றால் எனக்கு அது தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணம் சட்டபடி இல்லாநிலை ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தின்படி எனக்கு இந்துதிருமணச்சட்டத்தின்படியோ, இந்துவாரிசுரிமை சட்டத்தின்படியோ எனக்கு எந்த உரிமையும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

19. குட்டிச்சாமி தான் பாட்டப்பத்து ஊருக்கு சென்று மாரியம்மாளின் ஈமக்கிரயங்களை செய்தார் என்றால் சரிதான். குட்டிச்சாமியும், மாரியம்மாளும் பிரிந்துதான் இருந்தார்கள் என்றும் அவர்களுக்கு இடையே விவாகரத்து நடைபெறவில்லை என்றாலும் சரியல்லல.

20. குட்டிச்சாமி மத்திய அரசின் தொழில்நிறுவனத்தில் பணிபுரிந்தவர் என்பதால் வாரிசுரிமை தெரியும் என்றால் சரிதான். குட்டிச்சாமியும், மாரியம்மாளும் யார் யார் முன்னிலையில் எந்த ஊரில் பிரிந்தார்கள் என்ற விவரம் குறிப்படிவில்லை என்றால் சரியல்ல.

21. எனக்கு தெரிய குட்டிச்சாமியும், மாரியம்மாளும் நீதிமன்றம் மூலம் விவாகரத்து வாங்கவில்லை என்றால் சரிதான். குட்டிச்சாமிக்கு கிடைத்த எல்.ஐ.சி. மூலம் ரூ.4 லட்சமும், டெப்பாசிட்டில் இருந்த ரூ.5 லட்சமும், அலுவலகத்தில் கிடைத்த பணத்தையும் நான் வாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல, எல்.ஐ.சி. மற்றும் டெப்பாசிட் தொகையை மட்டும் தான் வாங்கினேன்.

22. வாரிசு சான்றிதழ் எதற்கு தேவைப்படுகிறது என்றால் குட்டிச்சாமியின் குடும்ப ஓய்வூதியத்திற்கும், அவர் பெயரில் உள்ள வீட்டிற்கும் தேவைப்படுகிறது. குட்டிச்சாமி அணிந்திருந்த தங்கசங்கிலி, மோதிரம் என்னவானது என்றால் அதைதான் அடகு வைத்து அவருக்கான மருத்துவ செலவை பார்த்தேன், மேற்படி தொகையை வைத்து தான் அடகு வைத்த நகையை மீட்டேன்.

23. 3,6, மற்றும் 4,5 பிரதிவாதிகளின் தாயார்களுக்கு நான் தான் திருமணம் செய்துவைத்தேன் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் குட்டிச்சாமியின் மனைவி என்று விளம்புகை கோராமல், நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

24. எனவே 3 முதல் 6 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிரிடை கோரிக்கை அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

District Munsif, Shenkottai